**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
**எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.**
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 042/ந/2022
நாள். 01.06.2022

திரு. M. சாம்கலோனல்,
சுகாதார ஆய்வாளர்,
ஜெயங்கொண்டம் நகராட்சி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
விருத்தாச்சலம் நகராட்சி. – எதிர்மனுதாரர்

வேலூர் மாவட்டம், காட்பாடி, திருவள்ளுவர் நகர், பாரதி 2வது தெரு, எண்.10, என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. சாம்கலோனல், என்பவரின் 06.04.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.04.2022 அன்று பெறப்பட்டு 042/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

வேலூர் மாவட்டம், காட்பாடி, திருவள்ளுவர் நகர், பாரதி 2வது தெரு, எண்.10, என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. சாம்கலோனல், என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“நான் ஜெயங்கொண்டம் நகராட்சியில் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் விருத்தாச்சலம் நகராட்சியில் சுகாதார ஆய்வாளராக 08.10.2018 முதல் 31.11.2021 வரை பணிபுரிந்து வந்தேன். சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.8251/2021 ஜே2 நாள்.26.11.2021ல் ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு பணி மாறுதல் செய்து உத்தரவிட்டார். 01.12.2021 முதல் ஜெயங்கொண்டம் நகராட்சியில் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு விருத்தாச்சலம் நகராட்சியிலிருந்து LPC மற்றும் பணிப்பதிவேடு 3 மாதங்களாக அனுப்பி வைக்கப்படவில்லை. இதனால் எனக்கு 3 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாமல் உள்ளது. இதுகுறித்து பலமுறை விருத்தாச்சலம் நகராட்சி மேலாளரிடம் மற்றும் நகராட்சி ஆணையர் (பொ) அவர்களிடம் கேட்டதற்கு சரியான பதில் அளிக்கவில்லை. எனக்கு 3 மாதமாக சம்பளம் வழங்காததால் மிகுந்த கஷ்டத்துடனும் மன உளைச்சலில் வாழ்ந்து வருகிறேன்.

நான் 25.02.2022 காலை 11.30 மணியளவில் விருத்தாச்சலம் நகராட்சி ஆணையர் கூடுதல் பொறுப்பு திரு. தா.ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களை சந்தித்து இதுகுறித்து கேட்பதற்காக என்னுடன் சுகாதார அலுவலர் திரு.T.முத்துகணேஷ் இருவரும் சேர்ந்து சென்று ஆணையர் பொறுப்பு திரு. தா.ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களிடம் வழங்குமாறு கேட்டதற்கு பணி பொறுப்புகளை ஒப்படைக்கவில்லையென கூறினார். அதற்கு நான் பணி பொறுப்புகளை சுகாதார அலுவலர் திரு.T.முத்துகணேஷ் அவர்களிடம் ஒப்படைத்துவிட்டேன். அவரும் எந்த ஒரு மறுப்பும் தெரிவிக்கவில்லை என்று சொன்னதற்கு அது சரி கிடையாது உனக்கு குறிப்பாணை கொடுப்பேன் என்றார். குறிப்பாணை கொடுங்கள் நான் பதில் அளிக்கிறேன் என தெரிவித்தேன்.

எனக்கு 3 மாதங்களாக சம்பளம் வழங்கவில்லை. LPC மற்றும் பணிப்பதிவேடு கொடுங்கள் என கேட்டதற்கு தகாத வார்த்தைகளால் திட்டி வெளியே போடா என்றார். நான் மரியாதையாக பேசுங்கள் என்று சொன்னதற்கு மீண்டும் தகாத வார்த்தைகளால் திட்டினார். மேற்கண்ட சம்பவம் அனைத்து விஷயங்களும் சுகாதார அலுவலர் திரு.T.முத்துகணேஷ் அவர்கள் கண்முன்னே நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து விருத்தாச்சலம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. எனது மனுவை பெற்றுக்கொண்ட போலீசார் CSR No.313–2022 வழங்கப்பட்டு அவர் மீது குற்ற எண்.326/2022 U/S 294(b), 506(1) IPC ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதனால் நான் மிகுந்த மன உளைச்சலில் உள்ளேன். இவர் மீது ஏற்கனவே விழுப்புரம் மேற்கு காவல் நிலைய போலீசாரை தகாத வார்த்தை திட்டியதன் காரணமாக குற்ற எண்.667/2008 IPC 332, 294, 323, 307 கீழ் வழக்கு பதியப்பட்டு திரு.தா.ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களை சிறையில் அடைக்கப்பட்டு ஜாமீனில் வெளிவந்துள்ளார். அதன்பிறகு இந்த வழக்கு நிலுவையில் உள்ளது ஆனால் விழுப்புரம் நகராட்சியில் பணி மேற்பார்வையாளராக மீண்டும் பணியில் சேர்ந்துள்ளார். இவருக்கு எதன் அடிப்படையில் வேலை வழங்கப்பட்டது என்பது தெரியவில்லை. திரு.தா.ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்கள் அநேக குற்ற வழக்கில் ஈடுபட்டுள்ளவரை எதன் அடிப்படையில் பதவி உயர்வு கொடுக்கப்பட்டது, மீண்டும் விருத்தாச்சலம் நகராட்சி ஆணையர் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனால் இவர் ஆணையர் கூடுதல் பொறுப்பில் இருந்துகொண்டு அதிகார துஷ்பிரயோகம் செய்வதோடு தனிமனித தாக்குதலில் ஈடுபட்டு வருகிறார் மற்றும் விருத்தாச்சலம் நகராட்சி சுகாதார அலுவலர் திரு.T.முத்துகணேஷ் அவர்கள் சாட்சி சொன்னார் என்ற கெட்ட எண்ணத்தோடு அவரை அவர் பணியினை செய்யவிடாமல் அவரை மிரட்டுவதோடு அவர் வருகை பதிவேட்டில் வேண்டுமென்றே (A) போடுகிறார். எனவே இவரால் மிகுந்த மன உளைச்சலோடு வாழ்ந்து வருகிறார். இதுவரையில் என்னுடைய பணிப்பதிவேடும் ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு அனுப்பி வைக்கப்படவில்லை இதனால் எனக்கு சம்பளம் வழங்கப்படாமல் உள்ளது.

- விழுப்புரம் மேற்கு காவல் நிலைய குற்ற எண். 667/2008 332, 294(b), 323, 307 IPC நாள்.23.11.2008.
- கடலூர் காவல் நிலைய குற்ற எண். 57/2019 294(b), 323, 506(1) IPC நாள்.07.02.2019.
- விருத்தாச்சலம் காவல் நிலைய குற்ற எண்.1635/2021 294(b), 323, 508(1) நாள்.31.12.2021.
- விருத்தாச்சலம் காவல் நிலைய குற்ற எண். 326/2022 U/S 294(b), 506(1) IPC நாள்.01.03.2022.

மேற்கண்ட குற்றவழக்கில் ஈடுபட்டுள்ள திரு.தா.ஜெயபிரகாஷ் நாராயணன் விருத்தாச்சலம் நகராட்சி ஆணையர் கூடுதல் பொறுப்பு என்பவர் அரசு பணியில் உள்ள என்னிடம் ஆணையர் பொறுப்பில் உள்ள அவர்கள் நல்ல வார்த்தைகளை பேசவில்லை. மேலும் என் பிறப்பையும் என்னுடைய தாயையும் கேவலமான வார்த்தைகளால் பேசியும் கொலை செய்வதாக மிரட்டியவர் அலுவலகத்துக்கு வரும் பொதுமக்களிடம் எப்படி நடந்து கொள்வார் என்பதை தங்களின் மேலான

கவனத்திற்கு கொண்டுவருகிறேன். மதிப்பிற்குரிய ஐயா அவர்கள் இதனை விசாரித்து திரு.தா.ஜெயபிரகாஷ் நாராயணன், விருத்தாச்சலம் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் கூடுதல் பொறுப்பிலிருந்து விலக்கி அவர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரர் திரு. சாம்கலோனல் அவர்கள் 25.05.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

''விருத்தாச்சலம் நகராட்சியில் சுகாதார ஆய்வாளராக 08.10.2018 முதல் 31.11.2021 வரை பணியாற்றி, பின்னர் பணி மாறுதலில் 01.12.2021 முதல் ஜெயங்கொண்டம் நகராட்சியில் பணியாற்றி வருகிறேன். விருத்தாச்சலம் நகராட்சியிலிருந்து என்னை பணியிலிருந்து விடுவித்தபோது எனது LPC மற்றும் பணிப்பதிவேடு போன்றவற்றை நான் புதிதாக சேர்ந்துள்ள ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு, விருத்தாச்சலம் நகராட்சியால் அனுப்பப்படவில்லை.

விருத்தாச்சலம் நகராட்சியிலிருந்து பணியிலிருந்து என்னை விடுவித்துக்கொள்ளும்போது, பணிப்பொறுப்புகளை வேறொரு சுகாதார அலுவலரிடம் ஒப்படைத்துள்ளேன் என எனது 02.12.2021 நாளிட்ட கடிதத்தின் மூலம், விருத்தாச்சலம் ஆணையருக்கு தெரியபடுத்தியதன் அடிப்படையில், பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட 3 மாத காலத்திற்குப் பின்னர் எனது LPC-ஐ மட்டும் அனுப்பியுள்ளனர். ஆனால், தற்போது வரை எனது பணிப்பதிவேட்டை அனுப்பவில்லை.

பணிப்பதிவேடு அனுப்பாதது குறித்து விருத்தாச்சலம் ஆணையர் பொறுப்பில் இருந்த நகராட்சிப் பொறியாளர் திரு.தா.ஜெயபிரகாஷ் நாராயணன் என்பவரை அணுகி கேட்டபோது என்னை கெட்ட வார்த்தையால் திட்டியும், மிரட்டலும் விடுத்துள்ளார்.

எனவே, இந்நேர்வு தொடர்பாக விருத்தாச்சலம் நகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும், மேலும் எனது பணிப்பதிவேட்டினை நான் தற்போது பணிபுரியும் ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு அனுப்பிடவும் ஆவண செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்''.

3) எதிர்மனுதாரரான விருத்தாச்சலம் நகராட்சி மேலாளர் திரு. கோ. அசோக்குமார் அவர்கள் 25.05.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

''விருத்தாச்சலம் நகராட்சியில் திரு. சாம்கலோனல் என்பவர் சுகாதார ஆய்வாளராக பணியாற்றி, பின்னர் நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயல்முறை பணி மாறுதல் ஆணை நாள் 16.12.2021–ன்படி, ஜெயங்கொண்டம் நகராட்சியில் 01.12.2021 முதல் பணியாற்றி வருகிறார். பணியிலிருந்து விடுவித்து உத்தரவிடப்பட்டபோது மனுதாரர் கவனித்து வந்த பணி பொறுப்புகளை வேறொரு சுகாதார அலுவலரிடம் ஒப்படைக்க கோரப்பட்டது. பொறுப்புகளை சரிவர ஒப்படைக்காததால் அவருக்கு LPC மற்றும் பணிப்பதிவேடு அனுப்பப்படவில்லை. ஆனால், 2 மாத காலத்திற்குப் பின்னர் அவருக்கான LPC அனுப்பப்பட்டது. ஆனால், பணிப்பதிவேடு அனுப்பப்படவில்லை.

திரு. சாம்கலோனல் தனது நாள் குறிப்பிடாத கடிதத்தில் விருத்தாச்சலம் நகராட்சியில் பணியாற்றும் மற்றொரு சுகாதார ஆய்வாளரிடம் பொறுப்புகளை ஒப்படைத்துள்ளதாக தெரிவித்துள்ளார். ஆனால், அதில் ஆவணங்களின் விவரப்பட்டியல் இல்லை. மேலும், அவர் கவனித்து வந்த பிறப்பு மற்றும் இறப்பு தொடர்பான பதிவேடுகள் போன்ற ஆவணங்கள் குறித்த விவரங்கள் இல்லாததால், மேற்கண்ட பதிவேடுகளை ஒப்படைக்கும்படி நகராட்சியின் 25.02.2022

நாளிட்ட குறிப்பாணையின் மூலம் கோரப்பட்டது. மேற்கண்ட பதிவேடுகளை இதுநாள் வரை மனுதாரர் ஒப்படைக்கவில்லை என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட குறிப்பாணையின் நகலினை இம்முறைமன்றத்தில் சமர்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

4) இம்முறைமன்ற நடுவத்தில் 25.05.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையின் போது, மனுதாரரின் புகார் மனு மீதான 09.05.2022 நாளிட்ட நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கையினை, நகராட்சி மேலாளர் சமர்ப்பித்தார். இவ்விளக்க அறிக்கையில் LPC மற்றும் பணிப்பதிவேடு ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு அனுப்புவது தொடர்பாக 25.02.2022 அன்று மனுதாரரிடம் பணி பொறுப்புகளை ஆவணங்களுடன் ஒப்படைக்க வேண்டும் என ஆணையர் தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்விளக்க அறிக்கையில் கொரானா நோய் தொற்று ஒழிப்பு தொடர்பான பணிகளுக்கான வாங்கப்பட்ட பொருட்களில் விருத்தாச்சலம் நகராட்சியில் முறைகேடுகள் நடந்துள்ளது என்கிற புகாரினை விசாரிக்க, நகராட்சி நிர்வாக இயக்குநரின் ஆணைப்படி விசாரணை அலுவலராக நகராட்சி ஆணையர் நியமிக்கப்பட்டு, முறைக்கேட்டில் திரு.சாம்கலோனல் மற்றும் திரு.T.முத்துகணேஷ் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர் என்பதை உறுதிபடுத்தியதன் காரணமாக ஆணையர் மீது பொய்யாக புகார் அளிக்கப்பட்டுள்ளது என விருத்தாச்சலம் நகராட்சி ஆணையரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரானா நோய் ஒழிப்பு பணிகளில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உரிய கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் ஆணையர் தெரிவித்துள்ளார்.

5) முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரான நகராட்சி மேலாளரின் வாக்குமூலம், ஆணையரின் விளக்க அறிக்கை மற்றும் ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

நகராட்சி நிர்வாக இயக்குநரின் ஆணைப்படி மனுதாரர் 01.12.2021 முதல் ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டதும், 02.12.2021 அன்றே மனுதாரர் தனது பணிபொறுப்புகளை விருத்தாச்சலம் நகராட்சி சுகாதார அலுவலர் திரு.T.முத்துகணேஷ் என்பவரிடம் ஒப்படைத்தார் என்பதை ஆவணத்தின் மூலம் அறியமுடிகிறது. ஆனால் மனுதாரரின் LPC மற்றும் பணிபதிவேட்டினை ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு அனுப்பப்படாமல், மனுதாரர் மீதான தனிப்பட்ட காரணங்களால் ஆணையர் காலந்தாழ்த்தி மனுதாரருக்கு மூன்று மாத கால சம்பளம் இல்லாமல் அலைக்கழிக்கப்பட்டார் என்பது மனுதாரரின் புகார் மனுவின் மூலம் தெரியவருகிறது. இதுகுறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் இம்முறைமன்ற நடுவத்திலும் புகாராக தெரிவித்ததை தொடர்ந்தும், மனுதாரர் பணிபொறுப்புகளை 02.12.2021 அன்று ஒப்படைத்ததற்கான கடித நகலை சமர்ப்பித்ததும், மூன்று மாதங்களுக்கு பிறகு 03.03.2022 அன்று LPC மட்டும் ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு ஆணையர் காலந்தாழ்த்தி அனுப்பிய செயலானது மனித நேயமற்ற செயலாக கருத வேண்டியுள்ளது.

மனுதாரால் 02.12.2021 பணிபொறுப்பு ஒப்படைக்கும் சமயத்தில் அப்போதே ஆவணங்களின் விவரப்பட்டியல் இல்லாததை சுட்டிகாட்டி அதனை அளிக்குமாறு கோராமல் மூன்று மாதங்களுக்கு பிறகு 25.02.2022 ல் நகராட்சியின் குறிப்பாணையில் ஆவணங்களின் விவரப்பட்டியலை கோருவது, ஏற்கதக்கதல்ல.

மனுதாரர் பணியிட மாற்றம் செய்யப்பட்டவுடன் அவரது LPC மற்றும் பணிப்பதிவேட்டினை உடன் பணியிட மாற்றம் செய்யப்பட்ட ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு அனுப்பாமல், LPC மட்டும் மூன்று மாதகாலம் கடந்து அனுப்பப்பட்டுள்ளது. மேலும், அவரது பணிப்பதிவேடு

அனுப்பப்படவில்லை. பணி பொறுப்புகள் ஒப்படைப்பு தொடர்பான ஆவணங்கள் மனுதாரரால் சமர்ப்பிக்கவில்லையெனில் , மனுதாரர் மீது குற்ற குறிப்பாணை (Charge Memo) அளித்து அவர் பணிபுரியும் ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையருக்கு அனுப்பி வைத்து உரிய நடவடிக்கை எடுக்க கோரியிருக்க வேண்டும். அதை விடுத்து ஆவணப்பட்டியல் சமர்ப்பிக்கப்படவில்லை என்று தெரிவித்து பணிபதிவேட்டை(SR) நிறுத்திவைத்திருப்பது ஏற்கதக்கது அல்ல. இது கண்டிக்கதக்கது.

எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படா வண்ணம், பொதுமக்களின் மற்றும் நகராட்சி பணியாளர்களின் கோரிக்கைகள் குறித்தான நேர்வுகளில் காலந்தாழ்த்தாமல் உடனடியாக நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பும்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

இந்த நிகழ்வில் சம்பந்தப்பட்டுள்ள நகராட்சி ஆணையர் திரு.தா.ஜெயபிரகாஷ் நாராயணன் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். இதுபோன்ற தவறான முன்னுதாரணங்களால் நகராட்சி நிர்வாகத்தின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவது கண்டிக்கத்தக்கது.

மனுதாரரின் பணிப்பதிவேட்டினை ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு இனியும் காலந்தாழ்த்தாமல் அனுப்ப உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விருத்தாச்சலம் நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 01–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. M. சாம்கலோனல்,
   10, பாரதி 2வது தெரு, திருவள்ளுவர் நகர்,
   காட்பாடி, வேலூர் மாவட்டம் – **632 006.**

2. ஆணையாளர், விருத்தாச்சலம் நகராட்சி.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   நெ.75, சாந்தோம் மெயின் ரோடு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்

முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

06/06/22

செயலாளர்

06/06/22